கடலூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழா - சிறப்பு மலர் வெளியீட்டு விழா!

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - சி.வெ.கணேசன் - பி.கே.சேகர்பாபு - கா.இராமச்சந்திரன் பங்கேற்பு!

கடலூர், பிப்.10

கடலூர் திருப்பாதிரிப் புலியூர், புனித வளனார் மேல்நிலைப் பள்ளி அரங்கத்தில், நேற்று (09.02.2024) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற 'கலைஞர் பண்பாட்டுப் பாசறை" விழாவில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றை நினைவு கூறும் வகையில் கலைஞர்100 நிழற்பட கண்காட்சியை திறந்துவைத்து பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து, அப்பள்ளி வளாகத்தில் சுற்றுலாத் துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை, தொல்லியல் துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், மகளிர் திட்டம், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பள்ளி கல்வித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மீன்வளத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மருத்துவம்; மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்திடும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து, மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரங்கினை பார்வையிட்ட தோடு தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் முகாமினை பள்ளி மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கி தொடங்கி வைத்தனர். குழந்தைகள் மற்றும் பெண்கள் அதிகளவு இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு நோயினால் பாதிக்கப்படுவதற்கு குடற்புழு தொற்று ஒரு காரணமாக உள்ளதால் 1 முதல் 2 வயது வரை ½ மாத்திரை (200மிகி), 2 முதல் 30 வயது வரை 1 மாத்திரை (400மிகி) அளவுள்ள குடற்புழு நீக்க மாத்திரைகளை பள்ளி மாணவ - மாணவிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி, கல்லூரி மாணவ - மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, ஓவிய போட்டி, வினாடி வினா போட்டி, கட்டுரை போட்டி போன்ற பல்வேறு போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றவர்களுக்கும், கால்பந்து, கபடி, கைபந்து போன்ற போட்டிகளில் ஆண்கள் - பெண்கள் என தனித்தனி பிரிவுகளில் வெற்றி பெற்ற அணியை பாராட்டி அமைச்சர் பெருமக்கள் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினர்.

மேலும், கலை பண்பாட்டு துறையின் சார்பில் 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளுக்கு மாவட்ட கலைமன்ற விருதுகளான இளமணி, கலை வளர்மணி, கலைச் சுடர்மணி, கலை நன்மணி, கலை முதுமணி போன்ற பிரிவின் கீழ் 30 நபர்களுக்கு விருதுகளும் ரூ.3,30,000 இலட்சம் மதிப்பீட்டில் பொற்கிழிகளும் அமைச்சர் பெருமக்களால் வழங்கப்பட்டது. தொடர்ந்து, மகளிர் திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட சிறுதானிய உணவுத் திருவிழாவில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற 6 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கும் மற்றும் கோலப் போட்டியில் வெற்றிபெற்ற 14 மகளிர் சுய உதவிக்குழு வினருக்கு பரிசுகள்; மற்றும் ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து, கலைமாமணி திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களை நடுவராக கொண்டு, 'தமிழர் பண்பாடும், மொழியுணர்வும் விஞ்சி நிற்பது முத்தமிழறிஞர் கலைஞரின் கலை இலக்கியத்திலா? அரசு நலத்திட்டங்களிலா?" என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழாவில் 'பண்பாட்டு தலைவர் நூற்றாண்டில் கலைஞர்" என்ற தலைப்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பயணங்களில் பல்வேறு பரிமாணங்களை தொகுத்த கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழா சிறப்பு மலரினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் வெளியிட்டனர்.

அதனைத் தொடர்ந்து, 'எத்திக்கும் கலைஞர்" என்ற தலைப்பில் கலைமாமணி ஜாகிர் உசேன் குழுவினரின் நாட்டிய நாடக நிகழ்ச்சியையும், 'தமிழ் கலை பண்பாட்டுப் பயணம்" என்ற தலைப்பில் இசையமைப்பாளர் பரத்வாஜ் குழுவினரின் சிறப்பான கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

கலைஞர் பண்பாட்டு பாசறை விழாவில் அமைச்சர் பெருமக்கள் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொதுமக்கள் பயனடையும் வகையில் சிறப்பு பட்டா வழங்கும் முகாம், சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்;, பல்நோக்கு மருத்துவ முகாம்கள், கல்வி கடன் முகாம் போன்ற பல்வேறு சிறப்பு நலத்திட்ட உதவிகள் அரசின் சார்பில் மாநிலம் முழுவதும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்தவகையில் கடலூர் மாவட்டத்தில் இன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழா நடைபெறுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக பதவி வகித்த காலங்களில் பள்ளி மாணவர்களுக்கு இலவச பேருந்து பயணம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டம்,இலவச கண்சிகிச்சை முகாம், மாற்றுதிறனாளிகளின் நல்வாழ்வு திட்டம், விதவைகளின் மறுவாழ்வு திட்டம், ஆதரவற்ற சிறுவர் - சிறுமிகளுக்கான கருணை இல்லங்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு, நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டம், இலவச வண்ண தொலைக்காட்சி பெட்டிகள், இலவச எரிவாயு அடுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 20 சதவீத இடஒதுக்கீடு வழங்கியவர், சமத்துவ கல்வி, அனைத்து மக்களிடையே ஏற்றதாழ்வுகளை களைவதற்காக அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் போன்ற பல்வேறு திட்டங்களை சாமானிய மக்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் வகையிலும், மேலும் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் எண்ணிலடங்கா திட்டங்களை வகுத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவது மிக பொருத்தமானது.

பொதுவாக காலத்தை கி.மு. மற்றும் கி.பி என்று பிரிப்பார்கள். அதை போலவே அரசியலில் எடுத்துக்கொண்டால் கலைஞருக்கு முன்பு, பின்பு என்று தான் சொல்ல வேண்டும். கலைஞரின் அவர்களின் படைப்புகளாக பல வரலாற்று நாவல்கள், சமூக நாவல்கள் மற்றும் பல்வேறு திரைப்படத்திற்கு வசனங்கள் மற்றும் பாடல்கள் எழுதியுள்ளார். சிற்பக்கலைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், தமிழுக்கு பெருமை சேர்க்கும் வகையிலும் 133 அடி உயர திருவள்ளுவர் திருவுருவ சிலையை கன்னியாகுமரியில் நிறுவினார். சங்கீத நாடக அகடெமியை இயல், இசை, நாடகம் என பெயர்மாற்றம் செய்தார். மனோன்மணீயம் பெ.சுந்தரனார் எழுதிய பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக 1970 ஆம் ஆண்டு அறிவித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அரசியல், கலை, திரைப்படம் என பண்முக தன்மையோடு விளங்கிய மாபெரும் தலைவருக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் கலைஞர் பண்பாட்டு பாசறை விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் விழாக் குழு உறுப்பினர்கள் எழுத்தாளர் மற்றும் பேச்சாளர் இராம.சுப்பிரமணியன், எழுத்தாளர் மற்றும் இயக்குநர் அஜயன் பாலா பாஸ்கரன், முன்னாள் துணை வேந்தர் இரா.தி.சபாபதி மோகன், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி.சுந்தரிராஜா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், துணைமேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், இணை இயக்குநர் கலைப் பண்பாட்டுத் துறை திருமதி.சிவசௌந்தரவள்ளி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் திருமதி இரா.சரண்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் நகராட்சி தனியார் மண்டபத்தில் தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் 742மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.65.71கோடி மதிப்பிலான வங்கிகடனுதவி பெறுவதற்கான ஆணைகளை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.முனிரத்தினம், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் வடிவேலு மற்றும் கழக நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.

கைத்தறி நெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும்

இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க விற்பனையாளர் - நுகர்வோர் சந்திப்பு!

அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, பிப்.10-

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க ஏதுவாக கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் வாங்குவோர் விற்பனை செய்வோர் சந்திப்பு நடைபெற்றது.

2023-2024 ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடரின் கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி அவர்களால் "கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க ஏதுவாக சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் டெல்லி ஆகிய 4 மெட்ரோ நகரங்களில் ரூபாய் 50.00 இலட்சம் செலவில் வாங்குவோர்விற்பனை செய்வோர் சந்திப்பு நடத்தப்படும்" என அறிவிப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து, முதல் வாங்குவோர் விற்பனை செய்வோர் சந்திப்பு நேற்று (09.02.2024) சென்னை, ஹயாத் ரெஜன்சி ஹோட்டலில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் 10 அரங்குகள் அமைக்கப்பட்டு, சென்னை மற்றும் பெங்களூரு தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனங்கள் மூலம் கலைஞர் நூற்றாண்டினை ஒட்டி வடிவமைக்கப்பட்ட 1000 புதிய வடிவமைப்புகளில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி இரகங்களும், தேசிய வடிவமைப்பு நிறுவனம், அகமதாபாத் மூலம் பயிற்சி பெற்ற வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட கைத்தறி இரகங்களும், புவிசார் குறியீடு பெற்ற செடிபுட்டா, நெகமம் மற்றும் சுங்குடி சேலைகளும் வாங்குவோர் / விற்போர் சந்திப்பில் காட்சிப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வாங்குவோர் விற்போர் சந்திப்பு தொடர்பான கைத்தறி தொகுப்பு கையேடு வெளியிடப்பட்டது.

இச்சந்திப்பின்போது, தமிழ்நாடு முழுவதிலிருந்தும் 282 ஜவுளி வணிகர்கள் கலந்து கொண்டு அரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்ட தனிச்சிறப்பு மிக்க கைத்தறி இரகங்களை பார்வையிட்டு ரூபாய் 40 கோடிக்கு மேல் கைத்தறி இரகங்களை கொள்முதல் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இவ்விழாவில் கைத்தறி துறைக்கென்று தனியாக புதிய வலைதளம் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

மேலும், முன் எப்போதும் இல்லாத வகையில், வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் பொங்கல் 2024 பண்டிகைக்கு 1.77 கோடி சேலைகள் மற்றும் 1.77 கோடி வேட்டிகளுக்கான உற்பத்தி பணிகளை 30.12.2023 அன்றுடன் நிறைவு செய்து, வேட்டி மற்றும் சேலைகள் பொங்கல் பரிசுத்தொகுப்புடன் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுத்தியதால், இத்திட்டத்தினை சிறப்புற நிறைவேற பணியாற்றிய துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கொள்முதல் முகமை நிறுவனங்களுக்கு மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், துணிநூல் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், கோ-ஆப்டெக்ஸ் செயலாட்சியர் மருத்துவர் இரா.ஆனந்தகுமார், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன், நெசவாளர் சேவை மைய இயக்குநர் முத்துசாமி, தேசிய கைத்தறி வளர்ச்சி கழகத்தின் மண்டல மேலாளர் இரத்தினவேல், துறை அலுவலர்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செஞ்சியில் முன்னாள் ஒன்றியச் செயலாளர் ரங்கநாதனின்

15வது ஆண்டு நினைவு தினம் - 1000 பேருக்கு அறுசுவை உணவு!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, பிப். 10-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மறைந்த முன்னாள் செஞ்சி ஒன்றிய செயலாளர்ரங்கநாதன் அவர்களின் 15 வது ஆண்டு நினைவு தினம்அனுசரிக்கப்பட்டது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார் தலைமைதாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் முன்னிலை வகித்தார்.

தொடர்ந்து செஞ்சி கூட்ரோட்டில்அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மறைந்த முன்னாள் செஞ்சி ஒன்றிய செயலாளர்ரங்கநாதனின் திருவுருவப் படத்திற்கு சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர்செஞ்சிமஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும்நிகழ்ச்சியைஅவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் வல்லம் ஒன்றியபெருந்தலைவர்அமுதா ரவிக்குமார், ஒன்றியதுணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய செயலாளர்கள்நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், துரை, இளம்வழுதி, மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழுஉறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ்,நகரசெயலாளர்கார்த்திக் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், அரசு வழக்கறிஞர்கள் கிருஷ்ணன், சீனிவாசன், தமிழ் செல்வி கர்ணன், உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.